17.04.2026

Ind. OP No. 10/2025

**ம.சா.1 – மாரியாயி**

**<u>26 மற்றும் 27–ஆவது எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால், நான் வீட்டில்தான் உள்ளேன். என் கணவர் வீட்டில்தான் இருக்கிறார். அவர் முதியோர் பென்சன் ரூபாய் நான்காயிரம் வாங்குகிறார். நான் முதல்விசாரணையில் ஓய்வூதியம்தான் என்று சொல்லியுள்ளேன் என்றாலும், முதியோர் பென்சன் என்று சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. என் கணவர் தன்னுடைய ஓய்வூதிய பணத்திலிருந்து தான் என்னை பராமரித்து வருவதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னை ஏமாற்றி பத்திரம் எழுதிக்கொண்டதற்காகவும், எனக்கு பங்கு கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதாலும்,வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்பதை தெரிந்துகொண்டு, இந்த வழக்கை வறியவர் வழக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 26–ஆவது எதிர்மனுதாரர் பெயரிலுள்ள விற்பனை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் என்றாலும், அதை ரத்து செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல. திருப்பதியில் இருந்து ரயிலில்தான் வந்து செல்கிறேன். எனக்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தி வழக்கை நடத்தும் அளவிற்கு வசதி, வாய்ப்பு உள்ளது என்றாலும், நான் ../

பொய்யாக வசதி, வாய்ப்பு இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.04.17 15:56:15 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.